திருமதி எ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, ஹரிஜன வீட்டு மனை கொடுப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால், மத்திய அரசாங்கத்தினர் 'ஒன் மேன் கமிட்டி' ஒன்று நியமித்தார்கள். அந்தக் கமிட்டியின் அறிக்கையை இந்தச் சபையின் முன்பு வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்த அறிக்கையை நான் இன்னும் பார்க்கவில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, இந்த ஹரிஜன நலத் துறையிலிருந்து வருகின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் ஸ்பெஷல் டியூடியிலேதான் வருகிறார்கள். அவர்கள் ஆறு மாதங்கள்தான் பணி செய்யக்கூடிய நிலையிலிருப்பதால் இந்த மனுக்களை ஆராய்ந்து முடிவு எடுக்க முடியவில்லை. ஆகவே, இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நிரந்தரமாக நியமிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர்கள் வேறு இடங்களுக்கு மாற்றியிருக்கலாம். கூடுமானவரை அவர்களை மாற்றக்கூடாது என்றுதான் க்ஷேம நல கமிட்டியின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறது. அரசாங்கமும் அப்படித்தான் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்திலே ஹரிஜன மனைக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் பகிர்ந்து கொடுக்கப் படாமல் கிடந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் போதுமான அதிகாரிகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஆகவே, போதுமான அதிகாரிகளை நியமனம் செய்து பிரித்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : தாமதம் இல்லாமல் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். நாங்களும் கலெக்டர் அவர்களும் கால தாமதம் ஏற்படக்கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறோம். இது சம்பந்தமாக அங்கத்தினர் அவர்கள் கலெக்டரைக் கலந்துபேசி விவரம் எழுதியனுப்பினால் அரசாங்கம் கவனிக்கும்.

MR. SPEAKER : Questions Nos. 74, 75 and 76 are postponed.

புதுக்கோட்டையிலுள்ள சிறை

* 77 **கேள்வி.—திரு.. செ. மாதவன் :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டையிலுள்ள மாவட்டச் சிறையில் தகரத்தினால் வேயப்பட்ட கொட்டகையில் கைதிகள் அடைக்கப்பட்டு வருவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கென்று புதிதாகக் கட்டடம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

4th August 1965]

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இதைப்பற்றி இதற்கு முன்பு கேட்கப்பட்டபொழுதும் அமைச்சர் அவர்கள் இதே பதிலை தான் கொடுத்தார்கள். நான் தமிழிலே கேட்டிருந்தேன். தகரத்தினல் வேயப்பட்ட கொட்டகையில் கைதிகள் அடைக்கப்பட்டிருப்பது உண்மையா?

கனம் திரு. கோ. பூவராகன் : நான் கூடத் தமிழில்தான் பதில் சொன்னேன். தகரத்தினல் வேயப்பட்ட கொட்டகையில் அடைக்கப்படவில்லை.

திரு. செ. மாதவன் : அமைச்சர் அவர்கள் அதற்கு வேறு பெயர் சொல்லலாம். உண்மையிலேயே நான் நேரில் பார்த்தேன், தகரத்தால் வேயப்பட்ட கொட்டகையில் தான் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கொட்டகை 1942-ம் வருடத்தில் போடப்பட்டது. இன்றைக்கு அது ஒழுகிக்கொண்டிருக்கிறது. கைதிகள் அங்கே இரவிலே படுக்கமுடியாமல் முழித்துக்கொண்டேதான் இருக்கிறார்கள். நான் நேரடியாகப் பார்த்தேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : அதைப் பார்த்தவர்கள் தான் இந்தப் பதிலைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுப்பிய அறிக்கையிலே தவறு இருக்க வேண்டும். உண்மையிலேயே அது டின் ஷெட் தான். அதற்கு நிஷான் ஷெட் என்று வேறு பெயர் உண்டு. அதைச் சுற்றி சுவர் இருப்பது உண்மைதான். அதிகமாகக் கைதிகள் வரும்பொழுது, இடமில்லாத காரணத்தால், அங்கே கொண்டுபோய் அடைத்து வைக்கிறார்கள். ஆகவே, அங்கே சிறைக்குத்தான் பாதுகாப்பு இருக்கிறதேயொழிய, கைதிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : எப்பொழுதாவது இட நெருக்கடி வரும்பொழுதுதான் அங்கே அடைக்கிறார்கள். இந்த இட நெருக்கடி தொடர்ந்து வருவதில்லை. ஆகவே, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : புதுக்கோட்டையிலே தகரத்தால் வேயப்பட்ட சிறை இருக்கிறதா இல்லையா என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : தகரத்தால் வேயப்பட்ட சிறை இல்லை.

திரு. செ. மாதவன்: புதுக்கோட்டையில் உள்ள சிறையில் சில சமயங்களில் அடைத்து வைக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில சமயங்களில் அடைத்து வைக்கப்படுகிற அந்தக் கொட்டகை எதனால் வேயப்பட்டிருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன் : அது கால்வனைஸ்டு ஷீட்ஸ் ஆல் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் அமைச்சர் அவர்கள் கால்வனைஸ்டு ஷெட் என்று சொல்கிறார்கள். அப்படியானால் சிமிண்ட் தகடா, செப்புத் தகடா, இரும்புத் தகடா? இரும்புத் தகட்டினால் தான் அமைத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் திரு. மாதவன் அவர்கள் கேட்ட சமயத்தில் கால்வனைஸ்டு ஷெட் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. அதை திருத்திக் கொள்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : கால்வனைஸ்டு ஷெட்தான் போடப்பட்டிருக்கிறது. டின் ஷெட் போடப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். டின் ஷெட் போடப்படவில்லையென்று சொன்னேன். டின் ஷெட்டுக்கும், கால்வனைஸ்டு ஷெட்டுக்கும் வித்தியாசம் உண்டு.

* 78 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மத்திய சிறைச்சாலையில் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடைகளினால் சுகாதாரக்கேடு அடைவது பற்றியும், தண்ணீர் வசதி இல்லாததைப்பற்றியும் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) ஸ்ரீ எஸ். மாதவன், எம்.எல்.ஏ., அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டில் கூறியுள்ள கருத்துரைகளைக் குறித்து தமிழ்நாடு சிறைச்சாலைகள் தலைவரைக் கலந்து ஆலோசிக்கப் பட்டது. அக் கருத்துரைகள் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்று அரசாங்கம் கருதியது.

9-00 உ.ப. **திரு. செ. மாதவன் :** இப்போது சிறைக் கைதிகளுக்கு யூனிபாரமாக ஒரு பாடி, ஒரு டிரவுசர் கொடுக்கிறார்கள். சிறைக் கைதிகள் நாள் முழுவதும் அந்த ஒரே உடையோடு இருக்க வேண்டியிருக்கிறது. கேரளத்தில் சுதந்திரத்திற்குப் பின்னால் இதைப் பற்றிப் பரிசீலித்து நம்முடைய நாட்டுப் பண்பாட்டுப் படி வேஷ்டி, சட்டை கொடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள். அதே போன்ற முடிவை நம்முடைய மாநிலத்திலும் எடுக்க உத்தேசம் உண்டா?